ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1914/40 - 2015 මැයි මස 15 වැනි සිකුරාදා - 2015.05.15

*1914/40 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

அறிவித்தல்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாகாண சபைகள் கட்டளைச் சட்டத்தின் 289 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருமான சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் ஆக்கப்பட்ட மாநகர சபைகளின் நகர பிதாக்கள், பிரதி நகர பிதாக்கள், மற்றும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுக் கட்டளை இத்தால் விதிக்கப்படுகின்றது. இந்தக் கட்டளை 2014.11.01 ஆந் திகதி முதல் செயற்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அன்றைய தினத்துக்கு முந்திய தினம் வரை செயற்படும் வகையில் இருந்த இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2005, மே மாதம் 06 ஆந் திகதிய 1391/25 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட கட்டளை இத்தால் செயலற்றதாக ஆக்கப்படுகின்றது.*

*சரத் ஏக்கநாயக்க,*
*முதலமைச்சரும் உள்ளூராட்சி*
*விடயப் பொறுப்பு அமைச்சரும்,*
*மத்திய மாகாணம்.*

*முதலமைச்சர் அலுவலகம்.*

**கட்டளைகள்**

*1.* *இந்தக் கட்டளைகள் மத்திய மாகாணத்தின் மாநகர சபைகளது நகர பிதாக்கள், பிரதி நகர பிதாக்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பான கட்டளைகள் என அழைக்கப்படும்.*

*2.* *மத்திய மாகாண மாகாண சபையின் மாநகர சபைகளுக்கெனத் தெரிவு செய்யப்படும் மாநகர சபையின் நகர பிதாக்கள், பிரதி நகர பிதாக்கள் மற்றும் உறுப்பினர்களுக்கெனப் பின்வரும் வகையில் கொடுப்பனவு 2014, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் செலுத்தப்பட முடியும்.*

| | ரூபா சதம் |
|---|---|
| நகர பிதாக்கள் | 30,000.00 |
| பிரதி நகர பிதாக்கள் | 25,000.00 |
| உறுப்பினர்கள் | 20,000.00 |

*3.1* *பின்வரும் சந்தர்ப்பங்களின்போது நகர பிதா, பிரதி நகர பிதா மற்றும் உறுப்பினர் ஒருவர் குறித்த கொடுப்பனவுக்கான உரித்தைப் பெறமாட்டார்.*

(i) சபையின் அனுமதியைப் பெறாது கொடுப்பனவுக்குரிய மாதத்தின் சபைக் கூட்டம், செயற்குழுக் கூட்டம் ஆகியவற்றில் பங்குபற்றாது இருத்தல் ;

(ii) சபையின் கருமங்களுக்கல்லாது தனிப்பட்ட காரணங்களுக்கென வெளிநாடு சென்றிருத்தல் ;

(iii) ஏதும் முறைகேடான முறைப்பாடுகள் மீது தடுப்புக் காவலில் அல்லது சிறைக் காவலில் இருத்தல்.

3.2 இந்தக் கட்டளையின் பந்தி 1 இன் (i) ஆவது உப பிரிவில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், நகர பிதா, பிரதி நகர பிதா அல்லது உறுப்பினர் ஒருவர் கடமைச் செயற்பாடுகளில் முறையான அனுமதியைப் பெற்று ஈடுபடும் சந்தரப்பத்தில் சபைக் கூட்டம், செயற்குழுக் கூட்டம் ஆகியவற்றில் கலந்து கொள்ளாமை காரணமாக அவரது கொடுப்பனவு உரித்தற்றதாக இருக்காது.

5- 800/1

---

**மத்திய மாகாண மாகாண சபை**

அறிவித்தல்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (255 ஆம் அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 193 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருமான சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் ஆக்கப்பட்ட நகர சபைகளின் தலைவர்கள், பிரதித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுக் கட்டளை இத்தால் விதிக்கப்படுகின்றது. இந்தக் கட்டளை 2014.11.01 ஆந் திகதி முதல் செயற்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அன்றைய தினத்துக்கு முந்திய தினம் வரை செயற்படும் வகையில் இருந்த இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2005, மே மாதம் 06 ஆந் திகதிய 1391/25 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட கட்டளை இத்தால் செயலற்றதாக ஆக்கப்படுகின்றது.*

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும் உள்ளூராட்சி
விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

முதலமைச்சர் அலுவலகம்.

**கட்டளைகள்**

1. இந்தக் கட்டளைகள் மத்திய மாகாணத்தின் நகர சபைகளது தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பான கட்டளைகள் என அழைக்கப்படும்.

2. மத்திய மாகாண மாகாண சபையின் நகர சபைகளுக்கெனத் தெரிவு செய்யப்படும் நகர சபையின் தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கெனப் பின்வரும் வகையில் கொடுப்பனவு 2014, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் செலுத்தப்பட முடியும்.

| | ரூபா சதம் |
|---|---|
| தலைவர் | 25,000.00 |
| உப தலைவர் | 20,000.00 |
| உறுப்பினர்கள் | 15,000.00 |

3.1 பின்வரும் சந்தர்ப்பங்களின்போது தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர் ஒருவர் குறித்த கொடுப்பனவுக்கான உரித்தைப் பெறமாட்டார்.

(i) சபையின் அனுமதியைப் பெறாது கொடுப்பனவுக்குரிய மாதத்தின் சபைக் கூட்டம், செயற்குழுக் கூட்டம் ஆகியவற்றில் பங்குபற்றாது இருத்தல் ;

(ii) சபையின் கருமங்களுக்கல்லாது தனிப்பட்ட காரணங்களுக்கென வெளிநாடு சென்றிருத்தல் ;

(iii) ஏதும் முறைகேடான முறைப்பாடுகள் மீது தடுப்புக் காவலில் அல்லது சிறைக் காவலில் இருத்தல் ;

3.2 இந்தக் கட்டளையின் பந்தி 1 இன் (i) ஆவது உப பிரிவில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், தலைவர், உபதலைவர் அல்லது உறுப்பினர் ஒருவர் கடமைச் செயற்பாடுகளில் முறையான அனுமதியைப் பெற்று ஈடுபடும் சந்தரப்பத்தில் சபைக் கூட்டம், செயற்குழுக் கூட்டம் ஆகியவற்றில் கலந்து கொள்ளாமை காரணமாக அவரது கொடுப்பனவு உரித்தற்றதாக இருக்காது.

5- 800/2

**மத்திய மாகாண மாகாண சபை**

அறிவித்தல்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருமான சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் ஆக்கப்பட்ட பிரதேச சபைகளின் தலைவர்கள், உப தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுக் கட்டளை இத்தால் விதிக்கப்படுகின்றது. இந்தக் கட்டளை 2014.11.01 ஆந் திகதி முதல் செயற்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அன்றைய தினத்துக்கு முந்திய தினம் வரை செயற்படும் வகையில் இருந்த இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2005, மே மாதம் 06 ஆந் திகதிய 1391/25 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட கட்டளை இத்தால் செயலற்றதாக ஆக்கப்படுகின்றது.*

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும் உள்ளூராட்சி
விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

முதலமைச்சர் அலுவலகம்.

கட்டளைகள்

1. இந்தக் கட்டளைகள் மத்திய மாகாணத்தின் பிரதேச சபைகளது தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பான கட்டளைகள் என அழைக்கப்படும்.

2. மத்திய மாகாண மாகாண சபையின் பிரதேச சபைகளுக்கெனத் தெரிவு செய்யப்படும் பிரதேச சபையின் தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கெனப் பின்வரும் வகையில் கொடுப்பனவு 2014, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் செலுத்தப்பட முடியும்.

| | ரூபா சதம் |
|---|---|
| தலைவர் | 25,000.00 |
| உப தலைவர் | 20,000.00 |
| உறுப்பினர்கள் | 15,000.00 |

3.1 பின்வரும் சந்தர்ப்பங்களின்போது தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர் ஒருவர் குறித்த கொடுப்பனவுக்கான உரித்தைப் பெறமாட்டார்.

(i) சபையின் அனுமதியைப் பெறாது கொடுப்பனவுக்குரிய மாதத்தின் சபைக் கூட்டம், செயற்குழுக் கூட்டம் ஆகியவற்றில் பங்குபற்றாது இருத்தல் ;

(ii) சபையின் கருமங்களுக்கல்லாது தனிப்பட்ட காரணங்களுக்கென வெளிநாடு சென்றிருத்தல் ;

(iii) ஏதும் முறைகேடான முறைப்பாடுகள் மீது தடுப்புக் காவலில் அல்லது சிறைக் காவலில் இருத்தல் ;

3.2 இந்தக் கட்டளையின் பந்தி 1 இன் (i) ஆவது உப பிரிவில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், தலைவர், உபதலைவர் அல்லது உறுப்பினர் ஒருவர் கடமைச் செயற்பாடுகளில் முறையான அனுமதியைப் பெற்று ஈடுபடும் சந்தரப்பத்தில் சபைக் கூட்டம், செயற்குழுக் கூட்டம் ஆகியவற்றில் கலந்து கொள்ளாமை காரணமாக அவரது கொடுப்பனவு உரித்தற்றதாக இருக்காது.

5- 800/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.